Registered at The G. P. O. Colombo As A Newspaper.

திராவிடன்

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட ,, ,, ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு ,, ,, ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

விளம்பர விகிதம்.

1 கலம்	முதன்முறை	ரூ. 4 50
¾ ,,	,,	ரூ. 3 00
½ ,,	,,	ரூ. 2 50
¼ ,,	,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—1. யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-பிரபவ௵ ஐப்பசிமீ ௧௰ (1927 ஒக்டோபர்மீ 27) வியாழக்கிழமை. இலக்கம்—9.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

விசேஷ அறிக்கை.

—:0:—

1. திராவிடனுக்குச் சந்தாதாரராகச்சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் 'பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னாகம்' என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத்தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னாகம்.

நம்சாகியத்தவர்களுக்கு ஓர் அறிவிப்பு.

தொண்டமானூர் செல்வச்சந்நிதி கோயிலில் நம்மவர்களால் கட்டப்பட்டிருக்கும் மடம் இப்பொழுது பழுதடைந் திருப்பதினால் அம்மடத்தைத் திருத்துவதற்கு யாபேருங் கருணைகொண்டு தங்களால் கூடிய பொருளுதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சங்கத்தின் உபகாரிசதரிசி.

நாற்றிசை நோக்கு.

ஓர் ஆங்கிலமாதின் துணிகரச் செயல்.

மிஸ் மேசிடிஸ் கௌியிற்ஸ் என்னும் ஆங்கிலமாது 15மணி 15நிமிஷத்தில் இங்கிலிஸ் கால்வாயைத் தாண்டிவிட்டாளாம். குளிரும் மூடுபனியும் மிகுந்தகாலத்தில் இவளைப்போல் வேறெவரும் மேற்படி கால்வாயைத் தாண்டவில்லையாம். கிறிஸ்நெஸ் முனையிலிருந்து காலை 2மணி 55நிமிஷத்திற் புறப்பட்டு மகாறெற் விரிகுடாவை மாலை 6மணி 10நிமிஷத்திற் போய்ச் சேர்ந்தாளாம்.

சாரதியின் யோகம்.

யூரிமார் 3 வருடம் நீக்கப்பெற்றனர்.

சென்றகிழமை கொழும்பில் ராஜகடுவா மோட்டர் விபத்தினால் ஒருவர் உயிர்ச்சேதமும் இருவர் படுகாயமும் ஏற்பட்ட வழக்கில் சாரதியாகிய எதிரி ஒரு கிழமை நெடுவிசாரணையின் பின் நிரபராதியென யூரிமாரால் காணப்பட்டான். நீதிபதி தனது அபிப்பிராயத்தைக் கூறி யூரிமாரை அவர்களபிப்பிராயங் கூறும்படி கேட்டனர். 'சுத்தவாளி' என யூரிமார் கூறியதும் நீதிபதி குறித்த யூரிமாரனைவரையும் மூன்று வருடத்திற்கு நீக்கிவிட்டார்.

தாழ்த்தப்பட்டோரும் மகாத்மா கருணையும்.

தூத்துக்குடியில் காந்திக்குக் கிடைத்த நகைகளை ஏலம்போட்டுக் கொண்டிருக்கையில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பொன்னம்மாள் என்றமாது ஒரு தட்டில் பூமாலையை வைத்து மகாத்துமாவை மும்முறை வணங்கியபொழுது போதும் போதும வாருங்கள் என்று மகாத்மா தமிழிலே சொன்னாராம். அந்த அம்மாள் காதில் அணிந்திருந்த பாம்படத்தைக் குறித்து மகாத்துமா அங்கிருந்த மாதர்களை நோக்கி என்முன் நிற்கும் அம்மாது தனது காதிலுள்ள பாரமான தங்க நகையைக் கழற்றி இந்தத் தாம்பாளத்தில் வைப்பாரானால் அவர் காதுகளுக்கு அற்ப சாந்தியும் விடுதலையும் உண்டாகும் என்றாராம்.

கழுகுகள் விளையாடுதல்

தனிமையும் முரட்டுத்தனமும் உடையனவென்று சாதாரணமாய்க் கருதப்படும் கழுகுகள் விளையாடுவதில் விருப்பமுடையனவென்று அறியப்படுகின்றன. ஆகாயத்தில், ஒரு மரக்கொம்பரோடு, அல்லது ஒரு எலும்புத்துண்டோடு ஒரு கழுகு விளையாடினதைத் தான் கண்டேனென்று பியர்சஸ் என்பவருடைய வாரப்பதிப்பு லிகிதர் ஒருவர் எழுதுகிறார். ஆகாயத்தில் அந்த எலும்பை விடுவதும், அதன் பின்னாற் பறந்துசென்று அதை அந்தரத்திலெடுப்பதும், பின் முதுகு கீழாகத்திரும்பி ஒரு பாதத்தால் எலும்பைப் பிடிப்பதுமாக ஒருமணிநேரம் வரையில் அக்கழுகு விளையாடிக்கொண் டிருந்ததாம். மிஸ்ரர் செற்றன் கோடன என்பவர், கழுகுகளைப் பற்றி எழுதிய புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்:—'நான் ஒருமுறை ஒரு மலையுச்சிக்குச் சென்றேன். அங்கே பனியதிகமாக உறைந்திருந்தது. பனியின்மேல் கழுகின் இறகு அடையாளமிருந்தது. அந்தப பனியின்மேற் சிறகுகளை விரித்தபடி கழுகு ஒன்று நடந்துகொண்டிருந்ததாக உணர்ந்தேன. தூரத்துவதற்கு வேறொரு பட்சியுமில்லாத அத்தனியிடத்தில் அக்கழுகு அப்படித் தனிமையாகச் செல்வதில ஒரு மகிழ்ச்சி யடைகிறது.

கலிகால விந்தை.

பெண் ஆணானது.

நாட்கமேடை வேஷத்திலன்று அங்க அடையாளங்களுட்பட்ட இயற்கைரூபமே மாறிவிட்டது விந்தையினும் விந்தையே! விரோனா தேசத்தில் விக்னேரினா ரிடா கிரேசியானா என்ற 18வயதுள்ள ஓர்பெண் இரவில் தூங்கி விழித்ததும் தன் சரீரம் ஆண் அடையாளங்களுடன் இருப்பதைக் கண்டு அதியாச்சரியமடைந்து உடனே டாக்டரிடம் பரிசோதனைக்குச் சென்றாள். அன்னவரும் அஃதோர் ஆண்சரீமேயென அத்தாட்சிதந்தனர். அதைவெளியிட்டதும் ஏற்கனவே அப்பெண்மணியைக் காதலித்திருந்த உடையவன் அவசரமாய் ஆங்கே வந்து ஆறுத் துயரடைந்தான். இங்ஙனமே பெண்மணிகள் பலர் இங்ஙனம் அதிஆச்சரியமாய் ஆணாக மாறியதுபற்றி அச்சரீரத்தை ஆலிங்கனஞ்செய்து ஆனந்தமனுபவிக்க அவாக்கொண்டு அப்புதுவாலிபனை மணந்துகொள்ளப் போட்டிபோட்டுக்கொண்டு முன்வருகிறார்கள். போட்டோ பிடிப்பவர்கள் அச்சரீரத்தை ஆடையில்லாமற் படம்பிடிக்க எவ்வளவோ பொருள் கொடுப்பதாகக் கூறியும் அவள் சம்மதிக்கவில்லை. இறந்தபின் அச்சரீரத்திற்கு ஆயிரம் பவுண் அளிப்பதாக ஓர் ஜெர்மன் கலாசாலை ஒப்புக்கொண்டிருக்கிறதெனத் தெரிகிறது.

நாயினும் தாழ்வு.

தென் ஆபிரிக்காவிலிருந்து அரசாங்கத்தார் உதவிபெற்று முதன்முறையாக ஆண்களும பெண்களும் குழந்தைகளுமாக 343 பேர் சென்றகிழமை சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கினார்கள் அவர்கள் அனைவரும் தென் ஆபிரிக்காவிலே பிறந்தவர்களாம்; தென் ஆபிரிக்காவில் தெருவில் திரியும் நாய்களுக்குள்ள உரிமை கூட அங்கேயுள்ள இந்தியர்களுக்கு இல்லையென்று அவர்களிலே ஒருவர் கூறினர்.

கிறிஸ்தவர்க்கோர் பிரதிநிதி.

இலங்கைச் சட்டநிருபண சபையிற் கிறிஸ்த சாகியத்தவர்க்குப் பிரத்தியேகமானவோர் பிரதிநிதியை வைத்துத் தரும்படி இராசாங்க கொம்மிஷனுக்கு மனுப்பண்ணும்படி கிறிஸ்த சாகியத்தவரிற் சிலர் ஆயத்தம்பண்ணினர். இதனாற் கிறிஸ்தவர் களுக்குள் வித்தியாசமான அபிப்பிராயங்க ளுண்டுபட்டன.

கிறிஸ்தவர்களுக் கெனப் புறம்பானவோர் பிரதிநிதி நியமனம் பெறுதல் தகுதியல்ல என்னும் அபிப்பிராயங் கொண்டவர்கள் தம்மபிப்பிராயத்தைப் பகிரங்கமாய் வெளிப்படுத்தும்படி சென்றகிழமை யாழ்ப்பாணத்திலுள்ள நிட்சுவே மண்டபத்திலோர் கூட்டம் வைப்பதற்கு விளம்பரஞ்செய்து அதற்கேற்ற வொழுங்குகளுஞ் செய்திருந்தனர் கூட்டம் ஆரம்பிப்பதற்கு நேரமானவுடன் அங்கு வந்திருந்த எதிர்க்கட்சியார் தம்முள் ஒருவரைச் சபாநாயகராகத் தெரிவுசெய்து, கிறிஸ்தவர்களுக்கெனப் புறம்பான வோர் பிரதிநிதி வேண்டுமென்று நிர்ணயம் பிறப்பிக்கத் தொடங்கினர். இதைக்கண்ட மற்றப்பகுதியார் புறப்பட்டுப்போய் முற்றவெளியிலோர் கூட்டம் நடத்தினர். இரு பகுதியாரும் தத்த மபிப்பிராயங்களுக்கியைந்த நிர்ணயங்களைச் செய்துகொண்டு போயினர்.

சந்தேகம் தனக்கே கொலையாக முடிந்தது

குருநாகலைச்சேர்ந்த டெல்விற்று தோட்டத்தில் முனிசாமி என்னுங் கூலி தன் மனைவியாகிய முத்தம்மா என்பவளைக் கத்தியாற் குத்திவிட்டுத் தற்கொலைசெய்துகொண்டதாகத் தெரியவருகிறது. ஷை முத்தம்மா என்பவள் சிலதினங்களுக்கு முன் ஒருநாள் குளித்துக்கொண்டிருக்கும்போது குப்பன் என்பவன் அவள்மீது தண்ணீரை ஊற்றிவிட்டான் என்றும், உடனேயே அவன் தான் அவளை யாரென்றறியாது தண்ணீர் ஊற்றிவிட்டதாகச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாகவும், முத்தம்மா இவ்விஷயத்தை அவ்வளவில் மறந்துவிட்டதாகவும், ஆனால் குப்பன் அச்சங்கதியை மறுநாள் முத்தம்மாவின் புருஷனை முனிசாமிக்குத் தானே சொன்னானென்றும் குப்பன் சென்றபின் முனிசாமி தனது பெண்சாதியை இவ்விஷயத்தைத் தனக்கு மறைத்ததாகக் கண்டித்தானெனறும், பின் அவன் வேலைத்தலத்துக்குச் சென்றவிடத்தில் அங்கும் இச்சம்பவத்தைக் குறித்துப் பலரும் அவனைப் பரிகாசம் செய்தார்களென்றும், அதனால் மனைவிமீது சந்தேகமுற்ற முனிசாமி வீட்டுக்கு வந்தவுடன் அவளைத் திட்டிவிட்டுத் தன்வயிற்றில் கத்தியாற் குத்திக் கொண்டானென்றும் அவள் அவனைத் தடுக்கப்போக அவளைக் குத்தி வீழ்த்திவிட்டு, மறுபடியும் தன் கழுத்தில் வெட்டிக்கொண்டிறந்துவிட்டானென்றும், முத்தம்மா நிடிகமா ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறாளென்றும் சொல்லப்படுகிறது.

வள்ளுவ விகடன் எழுதுகின்றான்.

கற்றவாசிகள் வசிக்கப்படும் நாட்டில், கல்வியறிவு கொஞ்சம்கூட இல்லாத சனங்களும் அந்நாட்டில் வசிக்க வேண்டுமாம்? கண்ணியம் நிறைந்த செல்வமுடையோர் அந்நாட்டி வசிக்கில்? தரித்திரதிசையைப் பொறுத்த வறுமையடைந்த சனங்களுமங்கு வசிக்கவேண்டுமாய்? மாதுசிரோன் மணிகளெனப் புகழ்ப்பெற்ற அழகுவாய்ந்த ஸ்திரிகள் வசிக்கப்பெறு நாட்டில் குரங்கைநிகர்த்த கொடுஞ்சூரிகளுமாகிய நெஞ்சகத்தையுடைய வஞ்சக ஸ்திரிகளும் வாழவேண்டுமாய்? புயபலபராக்கிரம சிங்கமென வீரம்பொருந்திய தீரன் ஒருவருக்காய் புகழும்போது? வீரத்தின் மணந்தானும் வீசப்பெறுத புருடன் ஒருவனென்றுமும் வேண்டுமாம்? இதுபோன்ற எத்தனையோ ஏற்றமுந்தாழ்வுமுண்டென விளக்குமாறு நம் தேசத்தில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிகளும் வேண்டுமாம். அப்பொழுது மேல்சாதியெனக் கண்ணியம் படைத்த உயர்சாதியாருக்கு மதிப்புண்டாம்.

அங்கு மகாத்மாகாந்தி இங்கு சூரியகாந்தி.

மகாத்துமா காந்திஜி அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கும் இவர்களின் முன்னேற்றத்திற்குமாய் அரும்பெரும் பிரயாசத்துடன் உழைத்தவருந் தொண்டைப்பற்றி யறியாதாரில்லை. இதுபோலவே யாழ்ப்பாணத்திலும் ஒருவர் இச்சாதியாரின் முன்னேற்ற விஷயமாய் போதிப்பதே தன் சீவியகாலத்தின் முதல் வேலையென்றும் விதைத்த விதைகள் இப்போதுபலன்தரக் காலமாய் விட்டதென்றும் தாழ்த்தப்பட்ட சாதியாரை மதுபானம் விட்ட காலத்திலிருந்தால் சுலபமாய் மேனிலையடையலாமென்றும் அங்கு மகாத்துமா காந்தி இங்கு தானொரு சூரியகாந்தி யெனவும் கூறினாராம்.

மரணத்துக்கஞ்சேல்.

சிவகோடிகளனந்தமெனினும் நம் மண்ணுலகின் கண், மதித்தற்குரிய மானிடயாக்கையை யடையப்பெற்ற மக்களின் முன்னே மக்களை யறியாது மரண பயமும் கூடகிற்கின்றது. அதற்காய நாம் மரணத்திற் கஞ்சேல் என்னும் வாக்கியத்தை கையாட வேண்டி யிருக்கின்றன. எப்படியோ வெனில் மரணம் என்னும் சொல் பொதுமொழியாக எல்லாருக்கும் மரணம் வருகிறது. மரணத்திற்குத் தப்பினேரில்லை. "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராய்ப் போய் விடுவார்களென்று" அறிஞர்கள் எடுத்துரைத்திருக்கின்றனர். அப்படியிருக்க மரணத்திற்கு என் பயப்படவேண்டும்? மரணபயத்தைப் போல மனிதரைக் கேவலப்படுத்துவது வேறொன்றில்லை. மரணத்திற்குப் பயப்பட்டால் மானம் போய்விடும் மரியாதை கெட்டுப்போகும். அடிமைத்தனம் வந்து சூழ்ந்துகொள்ளும் நம் தாழ்த்தப்பட்டவகுப்பார்களே! நீங்கள் மரணத்திற்கு பயப்படுகிறீர்கள் அதனால் தான் உங்களுக்கு இந்த கீழ்மையான நிலை யேற்பட்டிருக்கிறது. நீங்கள் முன்னுக்கு வாவிரும்பினால் மற்றைசாதியினரைப்போல நல்ல நிலைமையை அடைய ஆசித்தால் "ஐயோ செத்துப் போவோமே உயிர் போய்விடுமே" என்னுங் கேவலமான கோழைத் தனமான எண்ணத்தை அகற்றி விடுங்கள். உயிர் போய்விடுமே என்று உடல் நடுங்கி நிற்கிற கோழைத்தனமானவர்களுக்கு இந்த உலகத்தில் இடமே இல்லை.

திராவிடன் பத்திரிகையின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

கனந்தங்கிய ஐயன்மீர்,

திராவிடனுக்குத் தங்களால் வரவேண்டிய சந்தாவை அனுப்பாத [illegible] தங்கள் கருணையுடன் [illegible] வருமாறு கேட்கின்றோம்.

திராவிடன்.

சன்னுசப்:— 1927,
ஐப்பசிமீ 11உ வியாழக்கிழமை.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். குறள்

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.

—:o:—

பாரதமாதா செய்துகொண்ட புண்ணியத்தின் பயனாக காந்தி அடிகள் என்னும் மேலான புண்ணியபுருடன் திரு அவதாரஞ் செய்து சிறகிழந்த பறவைபோல் வலிகுன்றிக்கிடக்கும் இந்தியாநாடு மீளவலி அடைந்து சுய ஆட்சிபெற்று உயர்வடைதற்கு வேண்டும் வழிவகைகளையும், உடுப்பதற்குத் துணியுங் குடிப்பதற்குக் கஞ்சியுமில்லாமல் வறுமையுற்றுத் துன்புறும் ஆயிரக்கணக்கான ஏழைச்சனங்களின் துயரைப்போக்கும் உபாயங்களையும், இந்திய மக்களைப் பெரும்பாலும் ஒற்றுமை குலைத்து தீமைகளை உண்டுபண்ணும் சாதியென்னும் வியாதியையும் தீண்டாமையென்னும் கொடுமையையும் ஒழிக்கும் மார்க்கங்களையுங் கண்டுபிடித்து அனுட்டானத்திற்கொண்டு வருவதிலேயே தமது காலத்தின் ஒவ்வொருபகுதியையும் பயன்படுத்தி வருகின்றனர். உலகவின்பங்கள் ஒன்றையும் அற்பமேனும் விரும்பாது உலக நன்மை ஒன்றற்கு மாத்திரம் தமது உடல் பொருளாவி மூன்றினையும் அர்ப்பணஞ்செய்து மாசற இமைக்கும் உருவினராகிய காந்தி அடிகளின் பெயரும் புகழும் இவ்வுலகம் முழுமையும் குன்றிலேற்றிய தீபம்போல் விளங்குகின்றது. பற்றற்ற ஞானியாகிய காந்திமகானின் துறவை ஒருவாறு புத்தருடைய துறவுக்கு ஒப்பிடலாம். திருமுருகாற்றுப் படையின்கண், 'சீரைதைஇ வுடுக்கையர் சீரொடு வலம்புரி புரையும் வாலரை முடியினர் மாசறவிமைக்கு முருவினர், மானினுரிவைதைஇய வூன்கெடமார்பி னெலும்பெழுந்தியங்கு மியாக்கையர் நன்பகற் பலவுடன் கழிந்த வுண்டியரிகலொடு செற்றநீக்கிய மனத்தினர் யாவதுங் கற்றோரறியா வறிவினர் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு கடுஞ்சினங் கடிந்த காட்சியரிடும்பை யாவது மறியா வியல்பினர் மேவரத் துனியில் காட்சி முனிவர்'' எனக் கூறப்பட்ட முனிவர் இக்கணம் காந்தி அடிகளுக்குப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றனர். வானமுடிக்குப் பதில் துறவோர்க்குரிய முண்டிதஞ் செய்திருக்கின்றனர்

"துறந்தார்பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண்டற்று"

என்றுக்கு காந்தி அடிகளின் பெருமையை முடிவாக கூறுதல் எவர்க்கு மெளிதன்று

காந்தி அடிகள் சுயராச்சியத்துக்கு அடிப்படையாயுள்ள கைராட்டினத்தைப்பற்றிக் கூறுவனவற்றின் சாரம் பின்வருமாறு. இந்தியநாடு மேலோங்கிச் சுயஆட்சி முதலிய நலங்களைப் பெறுவதானால் இந்தியா கைத்தொழிலை விருத்தி செய்தல்வேண்டும். தங்களுக்குத் தேவையான பொருட்களெல்லாம் பிறரை எதிர்பாராது தாமே உண்டுபண்ணிவருதல் வேண்டும். இந்தியாவில் பயிர்பண்ணப்படும் பஞ்சினை மேல்நாட்டவர் தமது தேசத்துக்கு வாங்கிச் சென்று அழகிய ஆடைகளாக மாற்றி மறுபடியுமவற்றை இந்தியர்களுக்கு விற்று வருகின்றனர். இதனால் வருடம் வருடம் இலட்சக்கணக்கான ரூபாக்கள் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இங்ஙனம் இந்தியா நாளுக்கு நாள் வறுமையில் ஆழ்ந்து வருகின்றது. இந்தியர்கள் தமது நாட்டிற்கிடைக்கும் பஞ்சைக்கொண்டு தாமே ஆடைநெசவு செய்து கொள்வதானால் வருடம் வருடம் பிறநாடுகளுக்குச் செல்லும் இலட்சக்கணக்கான ரூபாக்கள் இந்தியாவுக்குள்ளே நின்றுவிடும். கைராட்டினவேலை பசிப்பட்டினிகளால் வருந்தும் ஆயிரக்கணக்கான சனங்களுக்கு முயற்சியைக் கொடுக்கும். இந்தியா நாடு மேலோங்கிச் சுயஅரசுபெறவேண்டுமானால் ஒவ்வொருவரும் கைராட்டினத்தில் வேலைசெய்யவேண்டும்.

காந்தியடிகள் தினமும் கைராட்டினத்தில் வேலைசெய்து வருகிறார்கள். கைராட்டினத்தால் பசிபட்டினிகளால் வருந்திய ஆயிரக்கணக்கான சனங்கள் சுகமாகச் சீவியம் நடத்திவருகின்றனர். கதர் ஆடைகளை உடுத்துவோர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நமது யாழ்ப்பாணநாட்டில் கதரை அபிமானிப்பவர் மிகச் சிலரே! கதர் தோபிமானிகளிடத்தில் சட்டசபைத்தேர்தலில் இருக்குங் கண்ணுங் கருத்தும் போலச் சனங்களுக்கும் நாட்டுக்கும் பலன்தரும் கைராட்டினமுயற்சியைப் பரப்புவதிலும் கதர் உடைகளைத் தரிப்பதிலும் அபிமானங்காணப்படவில்லை! இன்னும் யாழ்ப்பாணநாட்டின் விசேஷ கைத்தொழிலெனக்காணப்படும் புகையிலைச் சுருட்டு முதலியனவற்றின் விருத்தியால் சனங்கள் அடைந்து வரும் சேமத்தைக் கண்டும் கிணற்றுத்தவளைகள்போலவிராது நமது தாய்நாடாகிய இந்தியாவிற் காணப்படும் கைராட்டினம் முதலிய தொழில்களை நம்மவர் பரப்பல் வேண்டும். முற்காலங்களில் வீட்டிலுள்ள பெண்கள் நூல்நூற்பதும் ஆடவர் அவற்றை ஆடையாக நெசவு செய்வதும் வழக்கமாயிருந்தது 'நுண்ணிய பலவாகிய பருத்தி நுனிகளால் கைவன்மகளிர் தனது செய்கை நலந்தோன்ற மாண்பினுலோர்ழைப் பதலன்றே உலகத்து ஏனோரலாவது'' என்னும் யாப்பருங்கலவிருத்தியால் பழைய நாட்களில் பெண்கள் நூல்நூற்றார்களென்பது விளங்கும். நமது முன்னோர் ஆடை முதலியன செய்து பிறநாடுகளுக்குக் கொண்டுசென்று வியாபாரஞ் செய்தார்களென்பது பழைய இலக்கியங்களால் அறியலாம். இன்னுஞ்சில உயர்ந்த குடும்பத்தவர்கள் வீட்டில், முன்னுள்ளோர் பாவித்த நூல் நூற்குங் கருவி இருக்கக் காண்கின்றோம். முற்காலத்தில் நூல்நூற்றல் நெசவுசெய்தலை ஒருவரும் இழிவாகக் கருதவில்லை. இக்காலத்திற் சிலர் அது பறையர் சேணியருக்குரியதெனக் கருதுகின்றனர் அது முற்றுந்தவறானது. காந்தியடிகள் கார்த்திகை மாதம் இலங்கைக்கு வருவதாக அறிகிறோம் அப்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் வருவார். பச்சைமாளிகைகளிலும் இடம்பத்திலும் சோக்கிலும் அமிதமாகச் செலவிடும் பொருளினைத்திரட்டிக் காந்தியடிகளின் திருக்கையில் கொடுத்துவிட்டால் அது மலைபோல் புண்ணியமாகும்!

திருக்கோயில் வழிபாடு.

மக்கள் மனசை ஒருவழிப்படுத்தி இறைவனை வழிபட்டு அவனருளைப் பெற்றுய்யுமாறு அமைக்கப்பட்டனவே திருக்கோயில்களாகும். பண்டைநாட்களில் அவற்றிற் பூசைசெய்வோரும் பணி இயற்றுவோரும் பொருள் பிரசாதம் முதலியனவற்றை எதிர்பாராத கடவுட்பத்தர்களாகவும், வழிபடுவோர் ஞானிகளும் மாசற்றநெஞ்சுடையவர்களுமாயிருந்தமையின், ஆலயங்கள் தூய எண்ணங்கள் நிறைந்த தெய்வமணங் கமழும் செய்யபன்றங்களாகப் பெருமையுற்றுத் திகழ்ந்தன. அக்காலத்து அடியார்க்கெளிவந்து இறைவன் நிகழ்த்திய புதுமைகளும் பல. இப்பண்புகளால் கோயில்களுக்கு மேலான மதிப்பு இருந்துவந்தது. காலடைவில் சில திருக்கோயில்கள் தமது உண்மையானநோக்கங்களை இழந்து கண்காட்சிச்சாலைகளாகவும், கொலைக்களங்களாகவும், 'காமுகர், பரத்தையர்', வெறியர், சண்டையிடுவோர், சோம்பேறிகள், சோற்றுண்ணிகள் முழுமும் இடங்களாகவும் மாறிவிட்டன. இவ்வாறு நிகழவேண்டியதற்கு முக்கிய காரணங்கள் கோயிலதிகாரிகள் பூசகர்களின் மௌட்டீகமும் பொருளாசையுமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய நற்போதனைக்குப் பதில், அங்கு பரத்தையர்களின் ஆடல் பாடல்களின் ஆரவமும், அவற்றைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து அடித்து நெருக்குவோரின் ஆரவாரமும், ஆடு கோழிகளின் கூக்குரலும், மோதகவரி, மாவிளக்குவரி, எண்ணெய்வரி முதலிய பலவரிகளை அறவிடுவோரின் ஓசையுமே மிகுந்திருக்கின்றன. உயிர்க்குறுதிபயக்கும் நற்போதனைகளைச் சொல்வோரும் கேட்போரும் அங்குகாணப்படவில்லை. அரிசிசாமான்களைக் கொடுத்துவிட்டு அவற்றினுக்குப் பதில் புற்கை வாழைப்பழம் பலகாரம் முதலியவற்றைப் பெற்றுச் செல்கின்றனர். இது ஒருவகையான வியாபாரமுறையாகக் காணப்படுகின்றதேயன்றி வழிபாட்டு முறையாகக் காணப்படவில்லை.

கோயில்கள் நல்ல வியாபாரநிலையங்களெனக் கருதிப் பார்ப்பனர் ஊர்கள்தோறும் பல கோயில்களை உண்டுபண்ணி அவற்றில் திருவிழா முதலியன செய்ய வேண்டுமென வற்புறுத்திச் சனங்களைக் கொண்டு பெருந்தொகையான பொருள் செலவுசெய்வித்து ஊதியம் அடைந்துவருகின்றனர். திருவிழாக்கள் செய்வதனால் கையிலிருந்த காசெல்லாஞ் செலவழிந்து போகப் பலர் தரித்திரர்களாகிவிட்டனர். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் திருவிழாவுக்கென வீணிற் செலவழியும் பொருள் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குத் தினந்தினம் உணவளிக்கப் போதுமானதாகும். முன்னுள்ளவர்கள் சனங்களின் தேவையை அறிந்து ஊருக்கொரு கோயிலமைத்தனர். பின் கோயிற்பூசையில்லாது தட்டழியும் பிராமணர் தமக்கு ஓர் தொழிலைச் சம்பாதித்துக்கொள்வதனிமித்தம் முன்னிருந்த கோயில்களிருக்கவும் கடவுட்பெயரை மாற்றிவிட்டு வெவ்வேறு கோயில்கள் கட்டிக்கொண்டு வலைகட்டி இரைக்குக் காத்திருக்கும் சிலந்திகளைப்போலக் காத்து நிற்கின்றனர்.

இந்நாட்களிற் கோயிலில் பயபத்தி கிடையாது. ஏதோ கோயில் கும்பிட வருபவரிடம் பிடுங்குவதறுதியென முதலாளிமாரும் பூசகரும் ஒவ்வொரு வகையான வழிபாட்டுக்கும் இன்னதென வரிவைத்து அறவிட்டு வருகின்றனர். சிலகோயில்களில் முதலாளிமார் கோவிற்பூசைகளையும் கிழாக்காலங்களில் உள்வீதி புறவீதி அரிச்சனை முதலியவற்றையும் குத்தகை கூறி விற்றுவருகின்றனர். சில வழிபாடுகளுக்குப் புகையிரதப்பகுதி அல்லது புரூக்கற்குத்தம் தொழிற்சாலையில் டிக்கட் பெற்றுச் செல்வதைப்போல டிக்கட்டுகள் வாங்கவேண்டியிருக்கிறது. இங்ஙனம் குத்தகை விற்பதற்கும் வாங்கவேண்டியதற்கும் வரி வைப்பதற்கும் எந்த ஆகமங்களில் எந்த வேதங்களில் விதியிருக்கின்றன. நேரிற் கடவுளைக் கும்பிட முடியாமல் இருக்கிறபடியால் இடையில் துவிபாஷிகளுக்குக் காசுகொடுத்தால்தான் அவர் நம்மைக் கடவுளுக்குத் தேவபாஷையில் அறிமுகஞ் செய்துவைப்பார்.

எமது பழைய வழிபாட்டுமுறைகளெவ்வே, அவற்றையெல்லோ நாம் பின்பற்றுதல் வேண்டும். முன் கந்தழி வழிபாடு நன்னைவத் தமிழ்நாட்டில் இருந்தது அப்போது எல்லாரும் பிறருடைய உதவியின்றிக் கடவுளை நேரில் வழிபடத்தக்கதாயிருந்தது. பிறருடைய தொந்தரவு கிடையாது. இன்று காசியில் அவ்வகையான வணக்கமுண்டு அது எல்லாருந் தாந்தாம் பூவைப் போட்டு இறைவனை வழிபட்டுச் செல்வதாகும். இப்படியான வழிபாட்டுச் சுதந்தரம் வருமானால் கோயில்களில் வியாபாரம் நின்றுவிடும். சனங்கள் கோயில் வாடை கொடுத்துவழிபடவேண்டியிராது. (வரும்)

பெருமையும் சிறுமையும் அவரவர் அறிவின் பாலதே.

(முற்றொடர்.)

மனிதர்க்கு இயற்கையிலுள்ள அறிவைக் கூர்மைப்படுத்துவதற்கு கல்வியே முக்கிய சாதனமாயிருக்கிறதென்பதற்கு உதாரணமாக ஓர் சிறு கதையை இங்கு வரைகின்றும்.

ஒரு ஊரில் ஓர் வித்துவானிருந்தார். அவருக்கு ஓர் மனைவியும் நாலு பிள்ளைகளுமுண்டு. இருந்தும் வித்துவான்தான் மெத்தவுந் தரித்திரதசையிலிருந்து கஷ்டமடைந்துகொண்டிருப்பவர். ஒருநாள் வித்துவானின் பிள்ளைகள் தங்கள் பசிநோயைத் தாங்கமுடியாது தள்ளாடித் தள்ளாடித்தந்தையிடஞ் சென்று அவரின்மேற் சாய்ந்து அப்பா! வயிறு பசிக்கிறதே! எனச் சொல்லி விம்மி விம்மி வாய்விட்டழுது ஏதேனும் தின்பண்டம் வாங்கிக் கொடுக்கும்படி தொந்தரவு செய்தார்கள். அப்பிள்ளைகள் தவிப்பதைக் கண்ட வித்துவான் கண்ணீர்விட்டழுது ஆ சிவனே! நீயும் பார்த்திருக்கின்றாயே ஈதென்ன கோலம் நீயிருந்தலினும் இறந்துவிடல் நலமன்றோ! நீ பரமபிதாவானால் உலகரக்ஷகனுமின் என்னையும் எனது பெண்பிள்ளைகளையும் இப்படி வருந்தச் செய்வாயோ? என்று பலவாறு சிந்தித்து வருந்தி, பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்லி அவ்விடத்தினின்று மெழுந்து காவிவஸ்திரம், விபூதி ருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைத் தரித்து, மகாரிஷிபோல் பொலிந்திலங்க சுரேலென்று வெளிக்கிளம்பி அந்நாட்டு அரசனுடைய அரண்மனை வாயிலை யடைந்தார். வாயிற் காவலாளர் உள்ளே செல்லாதபடி தடுத்தனர். அக்காவலாளரை மதியாது கோப முகத்தைக் காட்டி ஏ! காவலாளர்களே! நீங்கள் இத்தவேளை உள்ளே விடாதபடிக்கு எம்மைத் தடுப்பீர்களானால் இன்னும் ஒரு நாழிகைக்குள் உங்கள் அரசனாலேயே கொல்லப்படுவீர்கள்.

நாமோ ஸ்ரீ கயிலாயத்திலிருந்து ஓர் இரகசிய சமாச்சாரத்தோடு வந்திருக்கின்றேன் இக்கணமே அரசனுக்கு அறிவிக்க வேண்டுமென்று சொல்ல காவலாளிகளில் ஒருவன் ஓடி அரசனிடத்தில் இது சங்கதியைத் தெரிவித்தான். அரசனிதைக் கேட்டு நகைத்து கயிலாசத்திலிருப்பதாவது! இங்கு வருவதாவது! இது என்ன புதுமை? என்றெண்ணி அவரை உள்ளே வரும்படி ஆக்ஞாபித்தான். காவலனும் விரைந்துவந்து முனிவேடம் பூண்டிருக்கும் புலவரை அரசனிடம் அழைத்துச் சென்றான்.

அவ்விராச சபையில் கல்வியிற் சிறந்தோங்கிய பண்டிதர்களும் மதிநுட்பமுடைய மந்திரிகளும் பிரபுக்களும் நிறைந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் இவரின் வேஷத்தைக்கண்டு மலைத்து எல்லோருமெழுந்து உபசாரஞ்செய்து ஓராசனத் தமரும்படி வேண்டிக்கொண்டனர். வித்துவானாகிய முனிவர் "எமக்குச் செய்யும் உபசாரத்தை நிறுத்துங்கள். நமக்கு எல்லாந் தலைவனும் லோகரட்சகனுமாகிய சிவபெருமான் கயிலையத்தி லிறந்தனர் அந்தோ என்செய்வோம்" என்று கதறினர். இதனைக்கேட்ட எல்லவரும் சுவற்றின் சித்திரப் பாவையைப்போல அசைவற்றிருந்தார்கள் அரசன்மட்டும் எம்பெருங்கருணைத் தடங்கடலாகிய எம்பெருமான் எவ்வா றிறந்தனர்? என்றனர். அதற்கு வித்வான், சொன்னதாவது, அரசே! நாம் ஓர் காரியார்த்தமாகத் திருக்கயிலாயத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது நமது சிவபிரான் என்ன காரணத்தினாலோ தமது திருமேனியில் ஒரு பாகத்தை விஷ்ணுவுக்கும் மற்றோர் பாகத்தை உமாதேவிக்கும் பகிர்ந்து கொடுத்திறந்தாரெனவும், அரசன் அது சரிதான். ஆனைப்பெருமான் சிரசிற் தரித்திருந்த பாகீரதி, அணிந்திருந்த பிறை, சர்ப்பங்கள் சர்வாண்ட சராசரங்களையும் ஆண்டிருந்த ஒப்பற்ற குடை அவர் திருக்காதிலேந்தியிருந்த பிரம கபாலமாகிய ஓடு முதலியவற்றை எங்கே வைத்தனரென்றனர். அதற்கு வித்துவான் பாகீரதியை சமுத்திரத்திற்கும், பிறையை ஆகாயத்திற்கும், சர்ப்பங்களை எல்லாம் பாதாளத்திற்குமனுப்பிவிட்டனர். ஆனாலவர் ஆண்டிருந்த குடையை மகாராஜாவாகிய உமமிடத்திலும், ஓட்டை ஏழையாகிய என்னிடத்திலும் கொடுத்தனர் என்றார். இவையெல்லாங் கேட்டிருந்த அரசன் சற்று நேரம் அசைவற்றிருந்து நாம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க விடை பகர்ந்தாரெனினும் நம்மிடம் குடையைக் கொடுத்ததெனக் கூறினாரே அதன் உண்மையை கேட்டறிவோமென்றெண்ணி ஐயா தவசிரேஷ்டரே! "தேவரீர் சொல்லியதெல்லாம் சரியே" என்று அரசன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அறிவிற்சிறந்த புலவரொருவரெழுந்து முனிவேடந்தாங்கியுள்ள வித்வானைக் கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்து தபோதனரே! உமதறிவும் சமயத்திற்குற்ற புத்தியும் மிக நன்று! நன்று!! உமது கல்வித்திறமையை எம்மால் எடுத்துரைக்குந் தரமன்று. என்று நமஸ்காரஞ் செய்து அரசனைநோக்கி அரசே! இப்பெரியார் சிறிது நேரத்திற்கு முன் சொன்ன வார்த்தைகள் எல்லோருடைய மனதையுங் கவர்ந்துகொண்டன. சர்வ பரிபூரண அகண்ட தத்துவ சுயம்பிரகாச வடிவமான பிரமத்திற்கு இறப்பும் பிறப்பும், கேடும், நாசமும் ஏது? இல்லையெனினும், இப்பெரியவர் திடமென்று தக்க காரணங்களை யெடுத்துக்காட்டிச் சிவபெருமான் இறந்தாரென்று வற்புறுத்திக் கூறியதினாலும் இவரின் வேடத்தினாலும் மெய்யென்று நம்பி ஏமாந்தோம். இன்றிரவு நமது சபையிலுள்ள வித்வ சிரோன்மணிகளுடைய அறிவைக்காட்டிலும் மிகவுஞ் சிறந்ததேயெனப் புகழ்ந்து கூறினர். இதைக்கேட்ட அரசன் புலவரைநோக்கிப் பெரியீர் நீவிர் இங்ஙனம் கூறியது யாது கருதியென வினவ, வறுமையே இதற்குக் காரணமென் றறிந்து அப்புலவருடைய வறுமை நீங்கும்படி வேண்டிய திரவியங்களையும், நன்செய்நிலங்களும் தன் மனைவி மக்களோடு இன்புற்றுவாழ ஒரு வீடும் கொடுத்து தன் சமஸ்தானத்திலேயே பிரதம வித்வானாக அமர்த்தி ஆதரித்து வந்தார்.

பெரியோர்களே! பார்த்தீர்களா! தரித்திரம் எவ்விதம் நீங்கியது? எதனாலான்றது? கல்வியினாலன்றோ? கல்வியினாலடையும் கீர்த்தியும், சிறப்பும், மதிப்பும், கௌரவமும், பெருமையும், நன்மையும் யாரால் அளவிட இயலும். (சுபம்.)

இது சரியா.

தற்போது நமது நாட்டில் நடப்பெறும் சங்கம், சபை, பத்திரிகை முதலிய எதிலும் நம் ஒடுக்கப்பட்ட சாதியாரின் உயர்வைப் பற்றிய பேச்சாகவேயிருக்கிறது. ஆகையால் சில பத்திரிகைகளின் அபிப்பிராயத்தை இதன் கீழ் வரைகின்றோம்.

சுதேசநாட்டியம் சொல்லியதின் சுருக்கம்.

ஒரு சைமான் வேலைக்காரனில்லாவிடில் திண்டாட்டப்படுகிறான். அரசன் இப்பிரசையில்லாவிடில் அரசன் வேண்டப்படாதவனாகிறான். சேவகனில்லாவிடில் ஒருவில்லை; தாழ்

வில்லாவிடில் உயர்வில்லை; சுத்தமில்லாவிடில அசுத்தமில்லை; எல்லாரும் செட்டிகளானுல் வாங்குவாரில்லை; சாதிக்கட்டு உலகம் நடை பெறுவதற்காய் வேண்டியது மேலத்தேசங் களில் அயபட்டர் வண்ணுர் ஆகுர் தொழிலாற் ருழ்த்தப்படவில்லையெனில் கபச'தியா ரவர் கழுத்திற் கயிற்றிட்டுக் குரங்குக் கூத்தாட்ட வோ, பாதத்தின்கீழ் மிதித்துசகொண்டிருக் கவோ இல்லை; தாழ்வும் ஏற்றமுட கடவுள் முதல் மனுஷர் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ் வனவிலும, மரஞ்செடி முதலிய யாவிலுமிருப் பதை யுணர்ந்துகொள். கல்வி தேசபுனிதம வர்த்தகம கைத்தொழில் முதலியவற்றால் ஏற்ற மடைந்தாலுட பண்டை அனுசரிப்பை இலகு வில் மாற்ற முடியாது நந்தனர், திருவள்ளுவ நாயனுர் அழகனைத்திலும் அதிகாரங்கொண்ட பக்தியிற் சிறந்திருந்தபோதிலும் தாழ்ந்தவ ரென்று பாடாட்டப்பட்டார்.

நிதிபரிபாலனஞ் செய்கிருேம், யாவர்க்கும் சுயாதீனம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

என்று ஆர்ப்பரிக்கும், ஆங்கிலரும் நிறத்துக் குத்தக்க மதிப்பை மதிக்கிருர். நவரத்தினங்க ளும் ஒருமதிப்பிலிருக்கவில்லை யாழ்ப்பாணத் தில் உயர்குடிப்பிறப்பும் கல்வி செல்வம் செல் வாக்கும் தேசபரிவர்த்தன ஞானமுஞ் சிறந்தவ ராய் நம் தமிழருட்பலர் கதம்தாலிக்க குருமா ராயிருக்கின்றுர் கனம் ஐசக் தம்பையா உவல்லியம் போதகர் முதலிய பலர் புறொட் டெஸ்தாந்துக் குருமாராய்ப் போதகர்களா யிருக்கின்றுர். இப்பெரியோர் நளவர், பள்ளர், பறையர், திருமபர் முதலியோர் வேளாளரு டன் சமபந்தி போசனம செய்யலாமென்றும மாறிவிவாகம செய்யலாமென்றம் சொல்லவும் செய்யவும் முன்வருவாரா என்று சிலர் வினவும் வினவும சாதிக் கட்டுப்பாட்டை சமயக்கட்டுப் பாட்டை இந்தியா இலங்கையிலிருந்து எங்கள் அங்கிலேய ராசசியத்தார் இன்னும் முற்றத் தள்ளிவிடாதிருப்பது எதினுலென்னும் வின வும் கவனிக்கத்தக்கது. அரசனுக்கு பிரசைபுத பெற்றருக்கும் பிள்ளைகளுங்கீழ்ப்படிவதுபோல கீழ்ப்படியென்று சாதிக்கட்டுவற்புறுத்துகிறது

காவலன் கடிதர்கூறியதின் சுருக்கம் கத் தோலிக்கவேதம் எம்நாட்டில் வந்தவுடனே இந்த ஏழைகளுக்காகப் போராடக் குருமார் ஏற்பட்டார்கள் அடிமைகளும் மேல்சாதி யாரும் ஒரு பிறவிதானென்ற உண்மையை வலியுறுத்தினுர்கள் பூர்வந்தொட்டு மிருகங் கள்போல் நடத்தப்பட்ட இந்த ஏழைகளை இராசாக்களோடுங்கூட ஒரே ஞானஸ்நானத் தைப் பெற்று ஒரு ஆலயத்திலிருந்து ஒரே கடவுளைத் தொழச் செய்தார்கள்.

இதைக்கண்டபோதே அடிமைச்சாதிகளுக்கு தாங்கள் யாரென்ற உண்மை புலப்பட்டதும் கூட்டங்கூட்டமாக ஈடேறத் தொடங்கினர் கள். இனி தங்களோடொத்த மனுஷர் களுடைய காலுக்குக்கீழே கிடந்து மிதிபட லாகாது என்ற உரோசமும் உண்டாவதா யிற்று, இந்த உரோசத்தினுல் காலத்துக்குக் காலம் ஆங்காங்கே தாழ்த்தப்பட்ட சாதியார் மேலுக்குவர எத்தனிக்கும் போதே பூர்வந் தொட்டு அடிமை ஆண்டவர்களுக்கு கோபம் பொங்கி கலகமுண்டாகிறது. இதுதான் உண்மை வரலாறு என்பதை ஆராய்வான் பெரியமனுஷர் எல்லாரும ஒத்துக்கொள்வார் கள். இது நிற்க,

ஐந்துசாதனம் சோல்லியதின் சுருக்கம்.

நமதுநாட்டிலே பூர்வந்தொட்டு இங்குள்ள சகலசாதியினரும் ஒருவருக்கொருவர் உதவி யாக அன்போடு வாழ்ந்துவந்தார்கள். சமய விஷயமாகவும் தத்தம வருணத்திற்கு விதிக் கப்பட்டபிரகாரம் ஒழுகிவந்தார்கள் அந்நிய சமயத்தவர்கள் இங்கு பிரவேசித்தபின்பே சாதிக்கலகங்கள் நமது ஊரில் உண்டாயின. மற்றுஞ் சமயத்தவர்கள் தாழ்ந்த வருணத் தாரகளென இங்கிருப்பவர்களுக்கிடையே புகுந்து அவர்களுக்குப் போலிச்சுவாதீனங் கொடுப்பதாக ஆசைவார்த்தைகூறி அவர்களை யும ஏனைய வருணத்தினரையும் பேதித்தற் கான முயற்சிகளைச்செய்துவரலாயினர். இதில் ஏராளமானவர்கள் பலர் அந்நியமார்க்கத்திற் பிர வேசித்தனர் இக்காலத்திலே தம்மதாபி மானங்கொண்ட சிலர் வேங்கைப்புலி ஆட்டுக் குட்டி விஷயமாகப் பரிவுகொண்டவாறு தாழ் ந்தவருணத்தாரிடம் தாம் பரிவுற்றுர்போல் நடித்து அவர்களை வஞ்சிக்கத் தலைப்பட்டிருக் கின்றனர். இனி "தாழ்ந்தவருணத்துதித்தோ ரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்ற பிர காரம் எந்தவருணத்துதித்தோரும் கல்வியறி வொழுக்கமுடையரேல அவர் எல்லாவருணத் தாராலும் கைக்கொள்ளப்படுவர். ஏனவே சைவசமயக் கொள்கையின்படி ஒருவனை உயர்த் துவதும அவனுடைய ஒழுக்கமேயல்லாமற் சாதியன்று. என்பது இனிது புலப்படுகின் றது. நந்தனுர் திருவள்ளுவர் முதலானேர் இதற்குத் திருஷ்டாந்தமாக விளங்குவர். இன் னும தாழ்ந்த வருணத்தாரைத் திருத்தவேண்டு மானுல் அவர்களுக்குக் கல்வியறிவை யூட்ட வேண்டும். அவர்கள் மத்தியில் நல்ல பிரசங்கங் கள் செய்தல்வேண்டும்; மதுபானம் புலால் உண ணல் என்னுமிவைகளை விலக்கி நித்தியஸ்நா னஞ் செய்தல் சிவசின்னங்களைத்தரித்தல் விரதமனுஷ்டித்தல் என்னுமிவைகளைக் கைக் கொள்ளச் செய்தல் வேண்டும்; இப்படிச்செய் யுஞ் சிலர் இன்னும் மற்றவர்களால் மதிக்கப்படு கின்றனர். இவற்றைவிடுத்து மற்றும் வருணத் தாரோடு இவர்களைப் பகைப்படுத்தி விடுவதி னுலும் கேடேயோர் பரிதாபமடையக்கூடியன வாகிய தாழ்த்தப்பட்டசாதியார் செருக்கப் பட்ட சாதியாரென நவீனபெயர்களை யிடுவதி னுலும் நீங்களும் கோயிலுக்குள் பிரவேசியுங் கள் பிராமணரோடு எதிரிபாராட்டுங்கள், வேளாளரை அலட்சியஞ்செய்யுங்கள், சைவசம யத்தில் நிரபீசுளாயின் ஒருபோதும் ஈடேற மாட்டீர்கள். ஆனபடியால கிறிஸ்துசமயத் திற்கு வாருங்கள் ஆளுக்கு ஐம்பது ஐம்பது ருபாவிற்கு நோட்டேனும ஈடேனும எழுதித் தாருங்கள்; என்று போதிப்பதினுலும் சாதிச் சண்டையும் மனஸ்தாபமும் சமாதானபங்கமும் சேருமேயல்லாமல் ஒருபோதும் தாழ்த்தப் பட்டசாதியார் உயர்த்தப்பட்ட சாதியாராக மாட்டார்கள்.

உதயதாரகை எழுதியதின் சுருக்கம்!

நந்தேசத்திலுள்ள நளவர், பள்ளர்; பறை யர் முதலிய பகுப்பினரைத் தாழ்ந்த சாதியா ரென்று சொல்லுவது சரியல்ல" ஆயினும் இவர்கள் நெடுங்காலமாய் மற்றச்சாதியாரால் தாழ்த்தப்பட்டு வருகின்றனர். இவர்களையிப் படி தாழ்ந்த நிலையில் விட்டிருத்தல் தமிழ்ச் சாதியினுயர்ச்சிக்குப் பெரியதடையாயிருக்கிற தென்று விரிந்த மனமும் பரந்த அறிவுடை யோர் இப்போ உணருகின்றனர் யாழ்ப்பா ணத்தமிழ்ச்சாதியதைச் சேர்ந்தவர்களுட் தாழ் த்தப்பட்ட பல்லாயிரக்கணக்கானேர் அறியா மையிலும் அநாகரீகத்திலு மமிழ்ந்திருக்க யாழ்ப்பாணத்தவர் சீர் திருத்தமுடையாரென மதிக்கப்படுவதெப்படி! ஆதலினுல் கல்வியறிவு டையோரும் புறசாதியாரோடு நடமாடி அவா கள் நந்தேசத்தை யெவ்வாறு மதிக்கின்றன ரென்று அறிந்தோரும் தாழ்ந்த சாதியாரென மதிக்கப்படுவோர் மேனிலைக்கு வரவேண்டு மென வாஞ்சிக்கின்றனர் ஷை சாதிகளை யுயர் த்துவதற்காய்ப் பிரயாசையெடுத்து வந்த கிறீஸ்தகுருமாரின் முயற்சிகளை யழிக்கத் தெண்டித்தபலர் இப்போ தம்பிழைகளைக்காண் கின்றனர் யாழ்ப்பாணத்திற்கப்பாலும் உலக மிருக்கிறதென்றறியாத அற்பமனமுள்ள சிலர் மாத்திரம இப்பொழுதும் அச்சாதிகளின் முன் னேற்றத்திற்குத் தடையாயிருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட சாதிகளினுயர்ச்சியைப்பற்றி இவ்வித அரு'சியுண்டாயிருப்பதால் அவர்களை உயர்த்தவேண்டியவர்கள் யார்? அதற்காகச் செய்யவேண்டிய முயற்சிகளெவை? என்று கவனிப்போம். ஷை சாதியார் பலநூற்றுண்டு களாக அடிமைகள்போல் நடத்தப்பட்டு தஞ் சுயமதிப்பையிழந்து போயிருப்பதால் அவர் களிற் பலர் தஞ்சுயவுரிமைகளை அறியாமலிருக் கின்றனர். அதுவுமன்றி அவர்கள் அறியாமை யென்னும் அந்தகாரத்தி லமிழ்ந்திகிடப்பதி னுல் தாமும் முன்னேற வேண்டுமென்னு முய ற்சி இயல்பாகவே அவர்களுக்கு வராது. ஆத லால் இவர்களை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டியகடமை மேல்சாதியாரென்றழைக் கப்படுவோரிலேயே தங்கியிருக்கின்றது. அவர் கள் தங் கடமையை நிறைவேற்றுகின்றனரா! அவர்களிற் பலர் பகிரங்ககூட்டங்களில் நின்று ஒடுக்கப்பட்டசாதியாரை உயர்த்தல் வேண்டு மென்று வாசாலபிரசாரணங்களைப் பொழிந்து விட்டுப் போகின்றனரேயன்றி அவர்களை உயர் த்துவதாய் யாதாயினுங்கிரியை நடப்பிக்கக் காணவில்லை.

தாழ்த்தப்பட்டிருப்போரை உயர்த்துவதற் குச் செயயவேண்டிய முதல் வேலையவர்களுக் குக் கல்வியூட்டுதலே நந்தேசத்திலுள்ள சில பாடசாலைகளிற் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளை களுக்கு இடமில்லை. அவர்களுக்கு இடங் கொடுக்கும் பாடசாலைகளிலும் அவர்கள் புறம் பாய் வைக்கப்படுகின்றனர் இப்படிச் சில பிள்ளைகள் புறம்பாய் வைக்கப்படுவதாற் களங் கமற்ற இளம மனங்களிலுஞ் சாதி வித்தியாச மென்னும நச்சுப்பூண்டு முளைத்துவிடுகின்றதே ஆங்கில பாடசாலைகளிற் தாழ்த்தப்பட்ட சாதி மாணவருக் கிடமில்லைப்போற் காணப்படுகின் றது. இங்குள்ள இரண்டொரு கிறீஸ்த கல் லூரிகளைத் தவிர வேறொரு ஆங்கில பாடசாலை யிலாவது தாழ்த்தப்பட்ட சாதி மாணவரைக் காணவில்லையே சாதி வித்தியாசத்தை நீக்க வாஞ்சிக்கிருேமென வாய்ப்பறை யறையும் பிரபுக்கள் இவ்விஷயத்திற் செய்யும் முயற்சி கள் ஒன்றையுங் காணேம். ஓர் தேசத்தின் வாழ்வுதாழ்வு அத்தேச மாணவரிலேயே தங்கி யிருக்கின்றது. ஆதலால் சாதி வித்தியாசத்தை யழிக்க விரும்பும பிரபுக்கள் நந்தேசப் பாடசா லைகளெல்லாவற்றிலும தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகள் சேரவும "அங்கு மற்றப் பிள்ளை களைப்போல் நடத்தப்பட வொழுங்கு செய்வ ரேற் சீக்கிரத்தில் சாதிவித்தியாசம நம் தேச த்தை விட்டகலுமென்பதற் கையமில்லை. இனி யாவது நந்தேசத்துப் பிரபுக்கள் வாசால பிரசா ரணங்களைப் பொழிவதிற் தம் நேரத்தைச் செலவழியாமல் தத்தஞ் செல்வாக்குக் குட் பட்ட சகல பாடசாலைகளிலும், சாதி வித்தியா சத்தை யகற்றத் தெண்டிப்பார்களாக

நாம் மேற்படி பத்திரிகைகளை அனுவதித்து எழுதுவது? இம்மாநிலத்தி லுற்பவித்த சீவாத் மகோடிகளில் மானிட சீவன் ஞெமான்று இம்மானிட உருவமே எதிலும் சிறந்ததெனப் போற்றப்பட்டிருக்கிறது. இருந்தும் இவ்வுரு வங்களிடத்தே பாகுபாடு வித்தியாசங்களுண்டு விரோதம் பற்றி அன்று நிறத்திலும் அறிவி னுலும் சாதி வித்தியாச மேற்படுகிறது எப்படி யெனில் நம்மை ஆளும்சாதியர் அயிரோப்பி யர் மற்றைய தமிழ்சாதியார், இன்னும் பறங்கி யர், சிங்களர், மகமதியர், நீக்குரோவர், காப்பி ரிகள் முதலான எத்தனையோ சாதிகளுண்டு இவைகளில் ஒன்றுக்கொன்று அதிக வித்தி யாச மிருந்தும ஒருவித பாகுபாடுமின்றி ஒரே சமத்துவத்துடன் நடத்தப்படுவதைக் காண் கிலரேும் ஒருசாதியாரை இன்னெரு சாதி யார் குறைவாக நினைத்திருப்பதினுலும், பாதக மில்லை?

நம் துரைகளாகிய அயிரோப்பியர் தம்மில் ஒரு பகுதியாரைத் தாழ்த்திவைத்திருக்க வில்லை? மற்றைய பறங்கியர் தம்மில் ஒரு பகுதி யாரைத் தாழ்த்தி வைத்திருக்கவில்லை? சிங்க ளர் அல்லது மகமதியர் யாரும் தம்மில் ஒரு பகுதியாரைப் புறம்புகட்டித் தாழ்த்தி வைத்தி ருக்கவில்லை? நாம் தமிழ்ச்சாதியாரே தம்மில் ஒரு பகுதியாரைத் தாழ்த்திவைத்து நடத்து வதினுல் தான் தாம் மற்றைய சாதியினரைப் போன்று முன்னேறுது கருப்புமனிதரென மற்றையோரால் இகழப்படுவதும ஒற்றுமை யீனத்தை உண்டாக்கி இன்னெரு சாதியார்க்கு அடிமைபோன்று தம் சாதியின் கௌரவத்தை இழந்து கையேந்தி நிற்பதைக் கவனித்தாவேனு நாமும் கடைத்தேறலாம்.

பொதுச் சமாச்சாரம்.

தாத்திவிட்ட பசாசைத் திரும்ப அழைக்க நினைத்துக் கச்சைகட்டிச் சில மதப்பிரியர் போட்டி போடுகின்றுர்கள் கள்ளுக்காக

தீபாவளிப் பண்டிகைக்கு இவ்வருடம் கதர்ப்பிடவைகளே யாழ்ப்பாணத்திலும் அதிக மாகச் செலவழிந்ததென வியாபாரிகள் பேசிக் கொள்ளுகின்றுர்கள்.

திரும்பவும் மறிச்சுக்கட்டியில் அரசினர் முத்துக்குளிப்பு நடத்தப் போகின்றுர்களாம், அப்பொழுது அரசினரே சிப்பிகளிலிருந்து முத் துக்களை யெடுத்து விற்பார்களாம்.

தீண்டாமையை முற்றுய் ஒழிக்க வேண்டு மென்று மகாத்மா காந்தியடிகள் பேசிவரு கின்றுர். இலங்கையின் பல பகுதிகளும் சென்று இதுமாதிரிப் பேசுவாராம்.

இலங்கைப் பகுதியின் குற்றவாளிகளின் மரணத் தண்டனையை ஒழித்துவிட வேண்டு மென இலங்கைச் சட்டசபையில் ஒரு தீர்மா னம் கொண்டுவரப் போகிருர்களாம்,

மதுபானத்தை மட்டாக அருந்துவது பாவமில்லையாம்!

(வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை எழுதியது.)

ஆப்தர்காள்! நூதன விவேகிகள் மதுபானத் தை அளவுக்குமிஞ்சிப் பருகுவதே பாவமென் றும், மட்டாக அருந்தினுல் பாவமில்லையென் றுங் கூறுகின்றுர்கள். அங்ஙனம் இவர்கள் கூறும் மாற்றம் மேதாவியர்களால், அங்கீகரிக் கத் தக்கதோ என்பதைச் சிறிது ஆலோசிப் பாம். பாவங்களுக்கெல்லாம் குருபீடமா யுள்ள மதுபானத்தை மட்டாகப் பாவிக்கலா மென்றுல், "கொலை, களவு காமம், பொய்" என்னும நான்கு பாதகங்களையும் மட்டாகச் செய்யலாந்தானே? ஒன்றுமின்றிக் காடுமுழுவ தும உழுது புரட்டிக்கொண்டு திரியும் பன்றிக் குச் சிறிய கொழுவைக் கொடுத்தால் சும்மா இருக்குமா? சங்கிலியிற் பிணிப்புண்டிருக்கும் போதே அளவற்ற சேட்டைகளைச் செய்யுங் குரங்கின் கட்டைக் கொஞ்சம் நெகிழ்த்து விட்டால், அதுபுரியும் திருக்கூத்தைச் செப்ப முடியுமா? ஒருமுறை பலபுருஷரோடு கலந்த பெண்ணை எத்தகைய காவலுக்குள் வைத்திருந் தாலும் கட்டுப்பட்டிருப்பாளா தொடக்கத் திலே குழந்தைகளின் அற்ப மலத்தைத்தின்று பழகிய ஞமலி நினைத்தபோதெல்லாங் கொல் லைப்புறத்தைச் சுத்தஞ்செய்துவிடுகின்றதே! மரணபரியந்தம் வதுவைசெய்வதில்லையென்று சத்தியஞ்செய்து பிரமசரிய விரதம்பூண்ட துறவிகளும் ஒருமுறை ருசிகண்டுவிட்டால், வனப்புள்ள மங்கையரைக் கண்டவுடன், "புளி யாங்காய் அருந்துபவரைப் பார்த்தவனைப் போல' வாயூறுகின்றுர்களே! மதுபானத்தைக் கனவிலுந் தீண்டாத எத்தனையோ விவேகிகள், மேகச்சூட்டுக்காக நீராகட்டிக் குடிக்கத் தொ டங்கிப் பின்னர் பெரிய குடிகாரராய்ப் போய் விட்டார்கள்! இடம் பொருள் ஏவல் முதலிய அட்டஐஸ்வரியங்களையும் படைத்த தனவந்தர் களிலனேகர், சரீரவலிமையும், தாதுபுஷ்டியு முண்டாகுமென்று கருதிச் சம்பையின், உவை யின், பிறண்டி முதலிய உயர்ந்த குடிவகைகளை டசின்கணக்காக வாங்கி, அலுமாரியில் நிரை த்துவைத்துக்கொண்டு சாப்பிடப் போவதற்கு முன்னே தாமும் மனைவியருமாகச் சிறுகிளா சில வார்த்து மட்டாகப் பாவித்துவந்து, நாள டைவில் பெரிய குடிகாரராகிப் பொருள் பண் டங்களனைத்தையும் விற்றுக் குடித்துவிட்டு, நீங்காத நல்குரவெய்தி அலக்கணுறுகின்றுர் கள். மனிதர் எந்தப்பாவத்தையும், தொடக் கத்தில் அச்சத்தோடும். நாணத்தோடும் அந்த ரங்கத்திலே மட்டாகவே செய்ய ஆரம்பித்து பின்னர் காலஞ்செல்லச் செல்லக் களை தெளிந்து பகிரங்கமாகச் செய்யத் துணிந்து விடுகின்றுர்கள். துட்டனேடு ஒருதினம முகா லோபனஞ் செய்தாலும் தீமையெய்து மென் பது சரதம். மதுபானம் மனிதரைத் தன் மார்க்கத்தில் அமிழ்த்தும் வஸ்துவல்லவென்று தங்கள் மார்பிலே கையைவைத்து மனச்சாக்ஷி யோடு கூறுவார்களா? மனிதன் மதுபானத்தை யுட்கொள்ளுதல் தூக்கணங்குருவியின் கூட் டுக்குள்ளே குரங்குபுகுந்ததையொக்குமன்றே! கொலை களவு காமம் முதலியபாவங்கள் சரீர வலிகுன்றி, நரம்புத்தளர்ச்சியெய்தி, தந்தபந்தி கள் கழன்று, விருத்தாப்பிய தசையடைந்து விட்டால் மெல்ல மெல்ல ஒவ்வொன்றுக நீங்கி விடுகின்றன. இக்கொடிய மதுபானமோ, ஆரம்பத்தில் ஒரு அணுவுக்குக் குடிக்கத்தொ டங்கிப் பழகக் கால்ருபா, அரைருபா, ஒரு ருபா, இரண்டுருபாவுக்குக் குடித்தாலுந் திரு ப்தியடையாத பக்குவத்தில் வந்துவிடுகின்றது. ஆதலால் அன்பர்களே! மதுபானத்தை மட்டா கப் பாவிக்கலாம் என்பாரதுவெற்றுரைக்குச் செவிசாயாது மதுபான வகைகளை யறவே யொழித்து, பால்தயிர் மோர் சர்பத்து முதலிய புனிதமான வகைகளை யருந்திச் சன்மார்க்க சீலராயொழுகக் கடவீர்கள். சுபம்! சுபம்! சுபம்!

திராவிடன் பத்திரிகையின்மீது மேற்படி யார் கூறிய மங்கலவாழ்த்து.

கட்டளைக்கலித்துறை.

அராவிட நுங்கி யமரரைக்
காத்திவ் வகிலமெலாம்
பராவிட நின்ற பதியே பரிந்து
பார் புரட்டுங்
கராவிட மார்ந்து கவலாது
சைவக் கலைபயின்று
திராவிட ளுேங்கி நிலவிட
நீயருள் செய்குதியே.

பெண்களுக்கு வேண்டுவது கற்பும் பக்தியும்.

"சற்பெணப்படுவதுசொற்றிறம்பாமை" என்னும் வாக்கியம் மிகவுஞ் சிறியதாக இருந்தபோதிலும் அவற்றுள் அடங்கியிரு க்கும் அர்த்தத்தை ஆராயுங்கால் சகல சாஸ்திரங்களிலும் பெண்கள் சற்புநிலை யைப்பற்றிச் சொல்லியிருக்கும் விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கின்றன. அதாவது: கணவன் வார்த்தைக்கு மாறு சொல்லா திருத்தல்என்று தெரியவருகிறது (சொற்) அதாவது: "சொல்" என்றுமாத்திரம் சொ ல்லியிருப்பதால், கணவன் சொல் நியாய மாயினுஞ்சரி அநியாயமாயினுஞ்சரி, சரி யாயினுஞ்சரி பிழையாயினுஞ்சரி, ஒரு பெண்ணனவள் அதன்படியே நடத்தல் வேண்டும். ஆதலின் கணவன் எதுவிஷய மாக இஷ்டப்படுகின்றுனே அதேவிஷயத் தை அநுசரித்து நடத்தலும், கணவன் விரும்பாத எக்காரியத்தையும் செய்யாது விடுதலும், கணவனின் சந்தோஷமான காலத்தில் தனது பாகத்தையுஞ் சேர்த்து ஆநந்முண்டாகச்செய்வதும், கணவன் துக் கப்படுங்காலத்தில் அவன் துக்கத்தைச் சமாதானஞ்செய்து அவனுக்கு ஆறுதல் செய்தலும் பெண்களின் கடமை யென் பது சொல்லாமலே விளங்குகின்றது

இப்புகழைக் கொண்டிருக்கும் புண்ணிய வதிதான் சற்புநிலை தவறுதவள். என்று சோல்லப்படுவாள். புருஷர் முகத்தைப் பாரா திருத்தலினுல்மாத்திரம் ஒருவள் சற்புடையவள் என்று சொல்லப்படமாட் டாள். ஆதலால்தான் திருவள்ளுவர் "தெய் வந்தொழா அள்கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யுமழை" என்றுர் அதா வது ஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வ மென்றும் ஸ்திரீகள் வேறுதெய்வாராதனை ஒன்றுஞ்செய்யாமல் பதியினிடத்தில் தெய் வங்களிடத்திருப்பதுபோல, கெட்டகாரி யத்தைச் செய்தால் தெய்வ அபராதம் வரு வதுபோல, பதி வார்த்தைக்கு மீறிநடந் தால் பதிக்கு அபராதஞ்செய்தவர்களா வோம்என்று எண்ணிப் பயந்து ஒழுகலும், தெய்வத்தின்பேரில் பத்திவைப்பதுபோல், பதியினிடத்தில் அந்தரங்கபக்தியுள்ளவர்க ளாய் இருத்தல்வேண்டு பென்பதும் தெற் றென விளங்குகின்றது. அவ்வாறு உள்ள பெண்மணியே பதிவிரதா சிரோன்மணி யெனச் சொல்லப்படுவாள். ஸ்திரிகளில் சிரோன்மணி போன்றவர்கள் எக்காரியங் களை எப்படி நினைத்தாலும் அது நிறைவே றும். தெய்வங்கூட அவளின்கோபத்திற்கு அஞ்சிநடக்குமென்றுல் உண்மையாய் அவ ளால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லையென்று சொல்வதற்கேற்ப—பெய்யெனப் பெய்யு மழை என்றுர். ஸ்திரீகளுக்கும் புருஷன் சொற்படி செய்வதைத்தவிர வேறு தான தருமங்கள், விரதங்கள், தெய்வ ஆராதனை யாதொன்றுமவேண்டியதில்லை. யாவும் பக் பத்தியில் அடங்கிவிடுகின்றது

மனேன்மணி,

குணமாமணி.

1-ம் அத்தியாயம்.

(முற்றொடர்)

சற்றுப்பொறுத்ததும், சின்னப்பா பிள்ளை, அப்பாடா! வயிறு வலிக்குதடி! அம்மாடி! பசியும் பொறுக்க முடியாது முதலில் சாப்பிடுவோம். எனச்சொல்லிக் கொண்டெழுந்து அங்குபோடப்பட்டிரு ந்த இலைபருகில் அமர்ந்தார். தங்கம்மா ளும் அவரருகில் உட்கார கண்ணம்மாள் இருவருக்கும் சாதம்படைத்தாள். சின் னப்பாபிள்ளையும் தங்கம்மாளும் கேலியும் சிரிப்புமாகப் பேசிக்கொண்டே தங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக் கையறையை அடைந்து சின்னப்பாபிள்ளை பெருமூச்சுடன் சங்கரா! என்றுசொல் லிக்கொண்டு படுக்கையின் மேல் சாய்ந் தார். அதைக்கண்ட தங்கம் 'அப்பாடா ஸ்ரீரங்கத்துரங்கநாதர் பள்ளிகொண்டது போல் பள்ளிகொண்டு விட்டார் பாட்டா" என்றுசொல்லிக்கொண்டே சிரித்தாள், சின்னப்பாபிள்ளை "தங்கம்! இப்பொழுது சிரிப்புக்காட்டாதே. சிரிப்புக்காட்டினுல் சாப்பிட்டசோறு வெளியேவந்துவிடும்" என தங்கம் சாப்பாடுவெளியே வந்தால் மற்றொரு இலையில் படைக்கிறதுதானே, என்றுள். சின்னப்பாபிள்ளை அஃதிருக் கட்டும். நீ அப்போது சொல்லிய சங்கதி யென்ன எனக்கேட்டதும் உடனே தங் கம் எழுந்து குணமாமணியனுப்பிருந்த கடிதத்தை யெடுத்துச் சின்னப்பாபிள்ளை யிடம் கொடுக்கும்பொழுது குணமாமணி அனுப்பியிருக்கிறதாகவுஞ் சொல்லிவிட் டாள்.

இதைக்கேட்டதும் கிழவனுர் பெரிதும் திகிலடைந்தும் காட்டாது "அடி தங்கம் நான் உனக்குப் புருஷனுக இருக்கிறே னென்று நீ ஒருவிதமாகவும் அடக்கநடித்த

மின்றி உள்ளத்தப்படி நடப்பதயிருந்தால் இப்பொழுதே உன்வீடு சேர்ந்துவிடலாம் எனப்பெரியவர்கூற 'தங்கம்மாள் கண்ணைக்கசக்கி நின்று சொல்லுவதாவது. அந்தோ! தெய்வமே! பெண்சென்மமெடுத்த பெருந்துறையே! யாரென்றுமறியாத சிறுமி வயது 16 ஆகவில்லை. இப்பழிச்சொற்களைக் கூறும்பாவிகளைத் தெய்வமேகேட்கட்டுமெனருள் இதனைப் பார்த்த சின்னப்பாபிள்ளை மெதுவாகச் சொல்லுவது. இராசையனும் முருகேசனும் இங்கு அடிக்கடி என்வருவார், அவர்களுக்கு இங்கு என்னவேலை இன்னும் சென்றமாசம் காத்தான்டி அம்மான் கோவிலுக்கு அவுடைதத்துக்குப்போயிருந்தோமே. அப்பொழுது அங்கு மேளமீனைக்காரனுடனேடு ஏதோபேசியதைக்கண்டு நான் கண்டித்தேன் பின், அன்றிரவு எங்கள் அறையில் கள்வனொருவன் வந்திருந்தான். அதற்கு முந்திய மாசத்தில் தாமோதரனுடன் தனியாக நீ சென்றதையறிந்த சாவகச்சேரியில் கண்டு கூட்டிவந்தேன். இதுவெல்லாம் இப்படியிருந்தும் அனுபவமில்லாத சிறுபெண் என்பதற்காகப் பொறுமையுடனிருக்கின்றேன். ஆகையால் தங்கம் இனிமேல் ஒன் புத்தியுடன் நடக்கவேண்டும், மணி பத்தாகிவிட்டது. இனிக்கண்விழித்திருக்க முடியாதெனச் சொல்லிப்படுத்தக்கிழவன் நித்திரையென்னும் காரிருளில் மறைந்தார்? இதனைக்கண்ட தங்கம் ஹா! ஹா! கிழவன் தொலைந்துவிட்டான். இதுவரையில் வான்மதியை ராகு பிடித்துவிடுவது போல, கிழவன் எனவிடாது பிடித்துவிட்டான். ஆனால் நித்திரையிலிருந்த கிழவனது முகத்தை வெறுப்புடன் நோக்கி ஹே துரோகி! உன்னாலல்லவோ நான் குறித்தநாயகனை யடையாது தத்தளித்துக்கொண்டிருக்கிறேன். பாழுந்தெய்வம் உன்னையேன் இப்பூமிக்குப் பாரமாக வைத்திருக்கிறது. எக்கிழப்பிணத்திற்கா வாழ்க்கைப்பட எண்ணியிருந்தேன்? விதியென்னும் கொடியவன் இக்கோலஞ்செய்துவிட்டு வேடிக்கை பார்க்கின்றான் எனச்சொல்லிக்கொண்டு, தனது காதலனைப்பார்க்கின்றாள். நற்சமையம் அங்கு யாரும் இல்லை. தன்காதலனென்று பொய்த்தோற்றத்தை நோக்கி "அத்தான்! வாருங்கள்! இதோ உங்களுக்காக மஞ்சம் தயாராகவிருக்கிறது. ஏன் மீண்டும் நிற்கின்றீர்கள்! உங்கள் மெல்லியபாதம் நோகவில்லையா? தாங்கள்தானு நிற்கிறது" என்று குதூகலத்துடன் சொல்லிக்கொண்டோடிப்போய்த் தோற்றத்தைக் கட்டிப்பிடித்தாள். அங்கு தன்காதலன் இல்லாததைக்கண்டு திடுக்கிட்டு வெட்கமடைந்தாள் சிறுக. பெண்களின் பெற்றோர்கள் பொருள் பூமிக்கு ஆசைப்பட்டு கன்னியர் விரும்பாத கணவருக்கு மணம் பேசி முடிப்பதாலவர்கள் இத்தகைய நிலைமையை யடைவார்களென்பது திண்ணம் இதுவுமன்றி அவர்கள் வாழ்நாளை வீணாகப் போக்கடித்து, துர்க்காரியங்களில் புகுந்துழன்று, ஊரார்களின் நிந்தனைகளைப் பொறுக்க முடியாது பரிதவிக்கும்போது, கடிமணஞ்செய்து கொடுத்த பெற்றோரை ஏன் சபியார்கள். அவர்களது துயரத்திற்குப் பெற்றோர்களன்றோ காரணம். அதற்கு உதாரணமாய் இங்கு பரிதாபப்படும் பெண்ணினது நடத்தை போகப்போகத் தெரியுமாதலால் அதைப்பற்றி இவ்விதத்தில் அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. (வரும்)

ஜீவகாருண்யம்.

திராவிடன் பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா,

கோலாலம்பூர் ஆதிதிராவிடர் ஆதரவில், விவேகானந்த ஆச்சிரமத்தில், கனம் டாக்குத்தர் சோமசுந்தரமவர்களின் அக்கிராசனத்தின்கீழ் சேலம் ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபைத்தலைவர் திரு ஞ வரதப்பன் அவர்கள் "ஜீவகாருண்யம்" என்னும் விடயமாக ஒரு பிரசங்கம் செய்தனர்.

முதலில், உலகம்புகழுஞ் சுவாமி விவேகானந்தருடைய சந்நிதியின் முன் நின்று பேசக்கிடைத்த பாக்கியத்தையும், ஆதிதிராவிடரும் மற்றும் ஏனைய சகோதரரும் ஒருங்கு சேர்ந்து குழுமி இருப்பதைப் பார்க்க, மனதில் உண்டாகும் மகிழ்ச்சியையும் கூறியபின், குறிப்பிட்ட சில முக்கிய விஷயங்களாவன:

(அ) ஜீவகாருண்யம் என்பது ஜீவன்—உயிர்—மேல் வைக்கும், காருண்யம்—கருணை ஸ்ரீமத். விவேகானந்த சுவாமிகள் ஜெத்திரி மகாராஜாவுக்கு விடுத்த கடிதமொன்றில் "தேசங்கள் எல்லாவற்றிலும் இருக்கிற ஆத்மாவை ஏகரூபமாய் அதாவது சமநோக்குடன் நோக்குகின்ற எவனும் தன் மனதினால், தன் ஆத்மாவை இம்சிக்கமாட்டான்; இந்த ஒரே வாக்கியத்தில் உலகத்திற்கு வேண்டியதான முத்திக்குரிய வழியும் ஜீவகாருண்யலட்சணமும் அடங்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஸ்ரீ பட்டினத்தடிகளும் "கொல்லாமல், கொன்றதைத் தின்னாமல், குத்திரங்கோள் களவு கல்லாமல், கைதவரோடிணங்காமல், கனவிலும் பொய்சொல்லாமல், சோரமாம் மையலிலே செல்லாமல், செல்வத்தருயாய்' எனப் பாடியிருக்கிறார். "செய்தால் வருங்குற்றம்; சிந்தையால் வரும் கேடு" என்ற வாக்கியமும் ஜீவகாருண்யத்தின் முதன்மையை வெள்ளிடைமலைபோல் விளக்குகின்றது.

(ஆ) ஜீவராசிகளில்: முதன்மையானது மானிடர். ஜீவசக்தியுள்ள மிருகங்களுக்கு ஹிம்சை செய்வதிலும், அறிவுள்ள மனுஷ ஜாதிக்குச் செய்யும் ஹிம்சையே பெரிது. ஜீவப்பிராணிகளைக் கொல்லாமலும், அவற்றின் மாமிசங்களைத் தின்னாமலும் இருப்பதே ஜீவகாருண்யம் என்று நினைத்துவிடுகிறோம். மனிதர்களை மனிதர் வருத்துவது மாபாதகமல்லவா—இதை நினைத்தன்றோ, நம் தமிழ்நாட்டு வரகவி, சுப்பிரமணிய பாரதியார்,

"மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கமினியுண்டோ? மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ?" என்று பாடினர். ஆதலால், குரூரமான பார்வையும் ஜீவஹிம்சை என்று அறியக்கிடக்கின்றது. சாப்பாட்டின் பொருட்டுக் கொல்லும் மிருகங்கள், ஒரே வெட்டாக வெட்டப்படுகின்றன. ஆனால் மனுஷஜாதியில் ஒரு வகுப்பான 'தீண்டாதார்' என சுயலத்திற்காக எண்ணப்படும் ஜாதியை ஒரே வெட்டாக வெட்டாது அவர்களுக்குக் காலாதிகாலம் முதல் கொடுத்துவரும் இம்சையோ கொடிது! கொடிது!!

(இ) நாய், பன்றி, கழுதை, முதலிய ஜெந்துக்களையெல்லாம் ரதத்தெருவில் தாராளமாக விடலாமாம்; எலி தத்துவண்டியன் முதலிய ஜெந்துக்களை மூலஸ்தானத்துள்ளும் விடலாமாம்; ஆனால் நியனை அக்கிரகாரவழியால் நடக்கவிட்டால்—ஆதிதிராவிடரை கோவிலுள் செல்லவிட்டால்—சற்றுப் பிராமணரல்லாதர் முதல் மண்டபத்துள் சென்றுவிட்டால், சைவம் கெட்டுப்போகுமாம். சுத்த தன்மை அறிய சுத்த இடங்களுக்குச் சென்றுலன்றோ, நற்பழக்கம் பழக சுத்தமனிதருடன் பழகினலன்றோ, ஏழைகள் "நல்லா நிணக்கமும் நின்பூசை நேசமும்" வைக்க முடியும்? ஆலயத்துள் மானிடராகப்பிறந்த ஒரு கூட்டத்தாரைப் புகவிடாமற் தடுப்பது "ஆலயர் தொழுவது சாலவுநன்று" என்ற வேதவாக்குக்கு விரோதமாகிறதல்லவா? இன்னும், ஏழைமக்களைவருத்துவதினுல், அவர்கள் வேறு மதம்புகுந்து, அந்நிய ஆசாரங்களைக்கொண்டு, மேல்நாட்டு அபிமானராய், எமது மதத்தைத் தூஷிக்க வந்துவிடுகிறார்கள். இதனுல் நமது மதத்தையும், தேசத்தையும், பாஷையையும் கொலைசெய்யும்பாதகம் எம்மைச் சூழுகின்றதல்லவா?

(ஈ) பறையர் கோமாமிசஞ்சாப்பிடுகிறவர்கள், அவர்களை எப்படித் தீண்டுவது, கோவிலுக்குள் உட்புக விடுவது என்று கூறுபவர் முழுவிஷயமுந் தெரியாதவர்களே. உண்மை என்னவெனில், பறையனைக் கோமாமிசம் புசிக்கச் செய்பவர் பிராமணரும் மற்றைய ஜாதியாருமே, ஆடுகோழிகளை மற்றைய ஜாதியார் புசிக்கிறதினுல் அவைகளின் விலை ஜாஸ்தியாகிறது. அதனுல் விலைகுறைந்தமாமிசம் பறையன் சாப்பிடும்படி நேரிடுகின்றது தவிர, பசுவின் பாலை, அதன் கன்றுதானும் திருப்தியாகக் குடிக்க விடாமல், கறந்து வயிறு புடைக்கப் பானஞ் செய்கிறார்கள் பிராமணர். பசுகள் சீக்கிரத்தில் நிலைகெட யடைகிறது. உடனே ஒரு பறையனை அழைத்து "அடே, இரண்டிருபா கொடுத்திட்டு இந்த மாட்டைக் கொண்டுபோ" என்று சொல்லித் தள்ளிவிடுகிறார்கள். உண்மையில் கொலைபுரியவைவர்கள் உயர்ந்தஜாதியாரே—இவர்களே மகா பாவிகள்.

(உ) கடவுள்-ஏழைபங்காளன்: அவரதுமனம் சந்தோஷமடையவேண்டுமானுல், நீங்களும் ஏழைபங்காளர்களாகஇருந்து, ஏழைமக்களுக்கு எழுத்தறிவியுங்கள்—பாடசாலைகள் ஸ்தாபியுங்கள்; உபதேசஞ் செய்யுங்கள்; அவர்களை வருத்தாது நேசியுங்கள். இதுவே ஜீவகாருண்யம்—முத்திக்குரிய வழி. ஜீவகாருண்யமே உருவெடுத்து வந்திருக்கும் காந்தியடிகள் என்னவேலை செய்கிறார்—செய்யும்படி இரத்தக்கண்ணீர் விட்டுக் கேட்கிறார்: இந்தியாவிலுள்ள ஏழு கோடி ஏழைமக்களின் பசிப்பிணியைப் போக்குங்கள்; அதற்காக ராட்டைச்சுற்றுங்கள்; கதர் அணியுங்கள். இந்துமதத்தில் பஞ்சமவகுப்புக்கு இடமேயில்லை—தீண்டாமையை ஒழியுங்கள்; பஞ்சமர்களைக் கோவிலுக்குள் புகவிடும்வரையில் கடவுளும் அங்கிரார் என்றல்லவோ எமது காந்தி அடிகள் கூறுகின்றார்.

இறுதியில், உபந்நியாசகர் வேண்டிக்கொண்டது யாதெனில், இவ்வூரிலிருக்கும் சங்கங்களில் ஆதிதிராவிட மக்களையும் அங்கத்தினர்களாகி அவர்களிடம் அன்பைக் காட்டி, அவர்களின் பயத்தைப் போக்கி, 'உயர்நிலையாகிய மனிதவர்க்கத்தின் பெருமைகளைப் போதியுங்கள். இதுவே உங்களின் லட்சியமாகட்டும். இதிலே ஜீவகாருண்யத்தின் அம்சங்கள் யாவும் அமையப்பெற்றிருக்கிறது என்று மனமுருகப் பேசி, தனது பிரசங்கத்தை முடித்தனர்.

கோலாலம்பூர், மா சின்னையா.
26-9-27.

காந்தி சரித்திரம்.

மகாத்மா காந்தி எழுதுகிறர்

பீனிக்ஸ் தோட்டம்.

நான் சகல விஷயங்களையும்பற்றி மிஸ்டர் வெஸ்டுடன் கலந்துபேசி, (ரஸ்கின் இயற்றிய) அண்டு திலாஸ்ட் என்ற நூலால் என் மனதில் ஏற்பட்ட உணர்ச்சிகளை விவரித்தேன், இந்தியன் ஒப்பினியன் பத்திரிகாலயத்தை ஒரு விவசாயப் பண்ணைக்குக் கொண்டுபோய்விடவேண்டுமென்றும்: அதில் எல்லோரும் ஒரே சம்பளம் பெற்று வேலைசெய்யவேண்டுமென்றும் மிச்ச நேரத்தில் அச்சுக்கூடவேலையைச் செய்யவேண்டுமென்றும் சொன்னேன். இந்த யோசனையை வெஸ் ஒத்துக்கொண்டார். நிற, ஜாதிபேதமின்றி எல்லோருக்கும் மாதம் மூன்றுபவுண் சம்பளமென்று முடிவுசெய்யப்பட்டது.

ஆனால் அச்சுக்கூடத்திலுள்ள சமார் பத்து ஆட்களும் வெகுதூரத்திலுள்ள ஒரு மூலையிலுள்ள தோட்டத்திற்கு வந்து குடியேறச் சம்மதிப்பார்களா என்பதும், காலக்ஷேபத்திற்கு மட்டும் போதுமான சம்பளத்துடன் திருப்தியடைவார்களா என்பதும் ஒரு கேள்வியாயிருந்தது. எனவே இந்த ஏற்பாட்டுக்கு இணங்க முடியாதவர்கள் தங்கள் வழக்கமான சம்பளங்களை வாங்கிக் கொள்ளலாமென்றும் காலகிரமத்தில் இந்தக் குடியேற்றத்தின் அங்கத்தினராகக்கூடிய நிலைமை அடைய முயலவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தோம். இந்த ஏற்பாட்டைப்பற்றி நான் அவர்களுடன் பேசினேன். ஸ்ரீமான் மதன்ஜித்துக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. எனது யோசனை மூடயோசனையென்றும் தனது சகலத்தையும் போட்டிருக்கிற ஒரு முயற்சியை அது கெடுத்துவிடுமென்றும், வேலையாட்கள் போய்விடுவார்களென்றும், இந்தியன் ஒப்பினியன் பத்திரிகை நின்றுபோய் விடுமென்றும், அச்சுக்கூடத்தை மூடிவிட நேருமென்றும் அவர் சொன்னர்.

அச்சுக்கூடத்தில் வேலை செய்தவர்களில் எனது ஒன்றுவிட்ட சகோதரர்களில் ஒருவரான சகன் லால் காந்தி என்பவரும் இருந்தார். எனது யோசனையை வெஸ்டிடம் சொன்ன பொழுதே நான் அவரிடமும் சொல்லியிருந்தேன். அவருக்கு ஒரு மனைவியும் குழந்தைகளும் இருந்தார்கள். ஆனால் அவர் இளமை முதலே என்னுடனே பழகி வேலைசெய்து பயிற்சி பெற்றவராயிருந்தார். எனவே அவர் எவ்வித தர்க்கமுமின்றி அந்த ஏற்பாட்டுக்கு இணங்கி அதுமுதல் என்னுடனேயே இருந்து வருகிறார். மிஷின்மேன் கோவிந்தசாமியும் எனது யோசனைக்கு இணங்கிவந்தார், மற்றவர்கள் எங்கள் ஏற்பாட்டில் சேரவில்லை ஆனால் அச்சுக்கூடத்தை எங்கே மாற்றினலும், அங்கே தாங்கள் வருவதாகச் சொன்னர்கள்.

அவர்களிடம் யோசனைசெய்து முடிக்க இரண்டு நாளைக்குமேல் சென்றதாக நான் நினைக்கவில்லை உடனே நான் டர்பானுக்கு அருகே ரெயில்வே ஸ்டேஷனுக்கு சமீபத்தில் ஒரு நிலம் வேண்டுமென்று பத்திரிகைகளில் விளம்பரஞ்செய்தேன். பீனிக்ஸ விஷயமாக ஒரு யோசனை வந்தது. மிஸ்டர் வெஸ்டும் நானும் அந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். ஒரு வாரத்துக்குள் இருபது ஏக்கர் நிலம் வாங்கிவிட்டோம். அதில் அழகான சிறிய ஊற்று ஒன்றும் சில கிச்சிலி மரங்களும் மாமரங்களும், இருந்தன. அதனை யொட்டி எண்பது ஏக்கர் நிலப்பகுதி ஒன்று இருந்தது அதில் ஏராளமான பழமரங்களும், ஒரு பாழடைந்த குடிசையும் இருந்தன. அதனையும் நாங்கள் வாங்கினேம். இரண்டும் சேர்ந்து ஆயிரம் பவுண் ஆயிற்று.

ரஸ்டம்ஜியின் ஆதரவு.

இத்தகைய எனது முயற்சிகளில் காலஞ்சென்ற பார்சி ரஸ்டம்ஜி எப்பொழுதும் பெரிய ஆதரவாயிருந்தார். அவர் ஒரு பெரிய கிடங்கைச் சேர்ந்த பழைய இரும்புத் தகடுகளையும் வேறு கட்டடச் சாமான்களையும் கொடுத்தார், அவற்றைக்கொண்டு நாங்கள் வேலைசெய்யத் தொடங்கினேம். போயர் யுத்தத்தில் என்னுடன் வேலைசெய்த தென்னுட்டுத் தச்சர்களும் கொத்தர்களும் அச்சுக்கூடத்திற்கு ஒரு குடிசையைக்கட்டுவதில் உதவிபுரிந்தார்கள். 75 அடி நீளம், 50 அடி அகலமுள்ள அந்தக் கட்டடம் ஒரே மாதத்தில் முடிந்துவிட்டது. மிஸ்டர் வெஸ்டும் மற்றவர்களும், ஆபத்தைக் கவனியாமல் தச்சர்களுடனும் கொத்தர்களுடனும் தங்கியிருந்தார்கள். மனிதவாழ்க்கையற்றிருந்த அந்த இடம் புல் பூண்டுகள் வளர்ந்து பாம்புகள் நிறைந்ததாய் மக்கள் வாழ்ந்திருப்பதற்கு ஆபத்தான இடமாயிருந்தது. எல்லோரும் ஒரு கூடாரத்தில் வசித்தோம், முக்கிய கட்டடம் ஒரு மாசத்தில் முடிந்தது. நாங்கள் எங்கள் சாமான்களையெல்லாம் ஒருவாரத்திற்குள் பீனிக்சுக்குக் கொண்டுபோய் விட்டோம். அது டர்ப்பானிலிருந்து பதின்மூன்றுமைல் தூரத்திலும் பீனிக்ஸ் ஸ்டேசனிலிருந்து இரண்டரை மைல் தூரத்திலுமிருந்தது. இந்தியன் ஒப்பினியன் ஒரே வாரத்தில் மட்டும் வெளியே மெர்க்குரி அச்சுக்கூடத்தில் அச்சிடவேண்டியதாயிருந்தது.

பின்னர், நான் இந்தியாவிலிருந்து என்னுடன் பொருள் சட்டுமாறு வந்திருந்த எனது பந்துக்களையும் வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த நண்பர்களையும் பீனிக்சுக்கு அழைத்துச்செல்ல முயன்றேன். அவர்கள் பொருள்தேட வந்திருந்தார்கள். அவர்களை என்னுடன் வருமாறு இணங்கச்செய்வது கஷ்டமான விஷயம். ஆனால் சிலர் இணங்கினார்கள். அவர்களில் மகன்லால் காந்தி என்னுடன் சேர்ந்து வேலை செய்யுமாறு தமது தொழிலைப் பார்க்கத் திருப்பிவிட்டார். அவர் தமது திறமையிலும், தியாகத்திலும், விசுவாசத்திலும் எனது தர்ம ஆராய்ச்சிகளில் ஒத்துழைத்த கூட்டாளிகளில் முதன்மையாக விளங்குகிறார். அவர் கைத்தொழில்களைத் தாமே கற்றுக்கொண்டார். அவ் விஷயத்தில் அவர் பதவி ஒப்பற்றது.

இவ்வாறு 1904-ம் ஆண்டில் போனிக்ஸ ஆச்ரமத்தைத் தொடங்கினேம் எண்ணற்ற தொல்லைகள் ஏற்பட்டும் இந்தியன் ஒப்பினியன் பத்திரிகை அங்கே தான் வெளியிடப்பட்டு வருகிறது அதில் முதல் ஏற்பட்டதொல்லைகள். மாறுதல்கள் முதலியவற்றைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் எழுதவேண்டும்.

விசேஷ அறிவிப்பு.

பியானே, லில்லிபுளுற், பிடில், ஆர்மோனியம், கிறமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். மேற்கூறிய சருவிகளுக்கும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எஸ். கே. லோட்டன் அன்டு கோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க லோட்டன் காலம்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறேம் உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K லோட்டன் & Co.

ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன் பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள் பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் சொரும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றேம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ. துரையப்பா,
Proprie'o'.

தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

இப்புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப் புத்தகங்களும் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும் மற்றுஞ் சகல சாமான்களும் "யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிர்த்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும ஆசிரியர் பிரவேச பரீட்சை, இரண்டாம் மூன்றும் தராதலபத்திரம் பெறுவோர்க்குரிய புத்தகங்களும் உரைநூல்களும் கிடைக்கும். வேண்டியவர்கள நேரிலும் வீ. பி. மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவுகொடுக்கப்படும்.

தனலட்சுமி புத்தகசாலை
சுன்னுகம்.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால், பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள .சால்வைகள் ஷர்ட் சீலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரிலும், பிரத்தியேகமான ஏஜண்டுகள மூலமாகவும் வரவழைத்து விற்கின்றேம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லா விதமருந்துவகைகளும், எங்கள்மருந்துச்சாப்பு பிரிவில, நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சரசமாயும், கணக்கமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேட்டன்ட்மருந்துகளும்கிடைக்கும்.

Dr. S. Ponnusamy,
Proprietor & Manager.

Printed by P. A. Krishnan for and on behalf of the Jaffna depressed classes Association Chunnakam published at the Saiva Pragasa Press, Vannarponnai, Jaffna.

Printed by me and Published at the Saiva Pragasa Press Vannarponnai Jaffna
P. A. Krishnan
30-10-27